## DATES TO REMEMBER

**BIRTHDAYS:**

| | |
|---|---|
| 05-09-2017 | Fr. B. Venmani Sylvester |
| 11-09-2017 | Fr. Sahaya Anthuvan Rex |
| 12-09-2017 | Fr. G. Saminathan |
| 16.09.2017 | Fr. A. Savari Raj |
| 17-09-2017 | Fr. S. Innacimuthu (Jr) |
| 18-09-2017 | Fr. Vincent Joseph |
| 21-09-2017 | Fr. A. Arockia Sundararaj |
| 25-09-2017 | Fr. I. Amalanathan |
| | Fr. Arockia Pannerselvam |
| | Fr. D. Arokiaraj Benhar |
| 29-09-2017 | Fr. V.M.J. Adaikalaraj |

**ORDINATION ANNIVERSARY:**

21-09-2017 Fr. S. Pannerselvam

**NECROLOGY**

Kindly remember them in your prayers

| Date | Name | Year of Death |
|---|---|---|
| 02-09-2017 | Fr. A. Thomas | 2000 |
| 07-09-2017 | Fr. S. Savariar | 1992 |
| | Fr. A. Susairaj | 2010 |
| 10-09-2017 | Fr. S. Irudayaraj | 2013 |
| 11-09-2017 | Fr. Susai Regis | 1963 |
| | Fr. A. Rajendran | 1964 |
| 23-09-2017 | Fr. A.M. Kulandai | 1995 |
| 28-09-2017 | Fr. M. Arockiasamy | 2006 |



*FROM THE BISHOP*

# I'M PROUD TO BE A GIRL!

Dear Friends,

Though the United Nations and our country celebrates at different dates during the year, the Church in India honours the Girl Children on 8th September, the feast of the birth of our Blessed Mother (perhaps this day may be eclipsed by the feast of Vailankanni in some parishes).

It is said that when God made man it was only a rough copy. The fair one was when made woman (Eve). Indeed all will agree with me the girl child is a reflection of the beauty and grace of God himself. As an image of God she actualises the presence of God and we too discover God and His plan through her. To reject a girl child would mean to reject God's plan. Thus every girl child is gift from God with a special plan. The society that does not respect the girl/woman becomes a breeding ground for all evils.

Mostly the girl child experiences rejection from birth itself. She is brought up with so much inequality, discrimination, harassment, inferiority, insecurity and fear that she remains docile, downtrodden, subjugated and exploited.

May this feast, not be another yearly reminder about the dignity of the girl child but a soul searching moment for both for men as well as for girls about the grandeur and sublimity of their vocation. Let every girl child repeat this mantra: 'I am proud to be girl'

With my Blessings,

*Your Bishop*

*Antony Devotta*

## Diocese of Tiruchirapalli
## Appointments 2017

| | | |
|---|---|---|
| 1. | **Fr. T. Albert** | - Director, Arunkodai Illam |
| 2. | **Fr. S. Alphonse Raj Prabu** | - Nagamangalam |
| 3. | **Fr. L. Antony Ramesh Kumar** | - Rector, St. Augustine's Minor Seminary |
| 4. | **Fr. Arockia Panneerselvam** | - Duraisamipuram |
| 5. | **Fr. A. Arockia Sundara Raj** | - Vicar Forane & Parish Priest-Manaparai |
| 6. | **Fr. D. Arul Sahayaraj** | - Ambigapuram |
| 7. | **Fr. S. Baskaran** | - On Leave |
| 8. | **Fr. C. Bastin Anito Raj** | - Formators Course, Pune |
| 9. | **Fr. A. Chinnappan** | - Vicar Forane & Parish Priest - Golden Rock |
| 10. | **Fr. I. David Raj** | - Avoor and Diocesan Liturgical Commission |
| 11. | **Fr. S. Deepan Kulandairaj** | - Correspondent, Shakespeare Matriculation and Asst. Parish Priest, Palayakovil |
| 12. | **Fr. K. Devaraj** | - Chaplain, Rosarian Sisters, Nazareth |
| 13. | **Fr. L.V. Eugine** | - Higher Study, France |
| 14. | **Fr. A. Gabriel** | - Parish Priest Fatima Nagar & Director (FST) |
| 15. | **Fr. S. Ignacimuthu (Sr)** | - On leave |
| 16. | **Fr. S. Innasimuthu (Jr)** | - Procurator and Thuraikudy Parish Priest farm |
| 17. | **Fr. S. James Selvanathan** | - Malai Matha, Ammachatram |
| 18. | **Fr. A. Jeyaraj** | - N. Poolampatty and Chancellor of the Diocese |
| 19. | **Fr. S. John Alexander** | - Director, Krithavar Vazhvurimai Iyyakkam,Catholic Association in addition to his present ministry |
| 20. | **Fr. P. John Kennedy** | - Resident Priest at Manaparai |
| 21. | **Fr. M. John Peter** | - Subramaniapuram and Administrator, St. James Academy (Construction) |
| 22. | **Fr. G. Joseph Arul Rajan** | - Hospital Chaplain |
| 23. | **Fr. J. Lawrence** | - Animator, St. Mary's Cathedral |



## BISHOP'S PROGRAMME - SEPTEMBER 2017

| | | |
|---|---|---|
| 01-02 | | Poonamallee - Classes |
| 03.09.2017 | | Pullampadi |
| 04.09.2017 | | Visitors |
| 05.09.2017 | M | Sonatham - Binding Unit Blessing |
| | E | Mathur - Mass |
| 06.09.2017 | | Meeting by Appointment (04.30 p.m.) |
| 07.09.2017 | | Tollgate - Mass |
| 09.09.2017 | | St. Paul's - Classes |
| 10.09.2017 | M | Cathedral - Feast Mass |
| | E | Ettukalpatti - Quasi Parish Inauguration |
| 11.09.2017 | | Visitors |
| 12.09.2017 | | School - Visit |
| 13.09.2017 | | Fatimanagar |
| 15.09.2017 | M | Parish society meeting |
| | E | Kalai Kaviri College General Body meeting |
| 16.09.2017 | | Holy Cross College - Perpetual vows |
| 17.09.2017 | M | P. Udayapatti - Mass |
| | E | Melsavariyarpuram - Mass |
| 18.09.2017 | | Visitors |
| 19.09.2017 | | School - Visit |
| 20.09.2017 | | Holy Redeemer's |
| 21.09.2017 | | Golden Jubilee - Cathedral |
| 22.09.2017 | | Regents Recollection |
| 23.09.2017 | | Cluny sisters - Chapter Mass |
| 24-25 | | Yercard - Catechetical meeting |
| 26.09.2017 | | Senate Meeting |
| 27.09.2017 | | Visitors by Appointment (04.30 p.m.) |
| 28.09.2017 | | Kolapakka |
| 29.09.2017 | | Rasimankalam |
| 30.09.2017 | | Thirumalairayapuram - Church Blessing |
| October | | |
| 01.10.2017 | | Palayakovil - Confirmation |
| 02.10.2017 | | Visitors |
| 04.10.2017 | | Uyyakondan - Marist Brothers |
| 06.10.2017 | | Visitors by Appointment (04.30 p.m.) |
| 07.10.2017 | E | Edamalaipattipudur - Chapel Blessing |
| 08.10.2017 | M | Golden Jubilee - Kailasapuram |
| | E | Film Festival - Nallayan Nilayam |

*Please Note:* For appointments with the Bishop, please contact Bishop's Secretary **Cell No. 94438 12344.**



பெருவிழாவிற்கு அழைப்பதற்கும் அதற்கு ஒத்துழைப்பு வேண்டியும் சில பல விளக்கங்களை அளித்து தமிழக அக்கறை இயக்கத்தின் சார்பாக அழைப்பு விடுத்தார். கத்தோலிக் திருச்சபை நிறைய நல்ல செயல்களை செய்கிறோம். அதை நாம் ஊடகங்களுக்கு சொல்வதில்லை. உலகத்திற்கு சொல்வதில்லை. சமூகத்திற்கு வழிகாட்டக் கூடிய வகையில் நாம் அதை பற்றி பேசுவதில்லை. சாதி மறுப்பு அல்லது கலப்பு திருமணம் செய்தவர்களுக்கு இந்த விழாவின் மூலம் அங்கீகாரமும், நம்பிக்கையையும் அதிகரிக்க செய்வத. குற்ற உணர்வுயின்றி சமூகத்தை சந்திக்க நம்பிக்கையளிப்பது. மேலும், கத்தோலிக்க திருச்சபை சாதி மறுப்பு என்பதை வரவேற்கிறது, ஊக்கப் படுத்துகிறது என்பதை உலகுக்கு உரக்க கூறுவதற்கான இப்பெருவிழா விற்கு 1000 தம்பதிகளை எதிர்பார்ப்பதாக கூறி உறவுகள், நட்புகள், கிராம, நகர புறவாசிகள், அன்பியங்களிலம் அறிவித்து அனைவரது ஆதரவையும் பெற்றுத் தர வேண்டிய அழைத்தார். ஆயர் பெருமான் அவர்களும் இதை அமோதித்து இப்புதிய முயற்சிக்கு அனைவரையும் ஒத்துழைப்பு நல்க வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து ஆயர் மறைமாவட்ட பாதுகாவலி விழா திருப்பலியில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் பற்றிய விளக்கங்களை அருட்பணி. மைக்கிள்ஜோ அவர்கள் அறிவிப்பார்கள் என்பதை விளக்கி இத்திருப்பலியானது விமரிசையாக இல்லாமல் பங்கு பிரதிநிதியாகிய உங்களது பங்கேற்புடன் நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். மேலும், டிசம்பர் 11 தேதியன்று காலை 10.30 மணிக்கு



மணப்பாறையிலும், 18ஆம் தேதி அன்று 10.30 மணக்கு உலக மீட்பர் ஆலயத்திலும் பொன் விழா, வெள்ளி விழா தம்பதியர்களுக்கான கவுரவித்தலும், சிறப்பு விழாத் திருப்பலியும் நடைபெற உள்ளது. பொன் விழா, வெள்ளி விழா நாயகர்கள் அவர்களது பங்குத் தந்தையர் வழியாக பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும் என்கிற அறிவிப்பையும் தெரிவித்தார்கள்.

தொடர்ந்து ஆயர் அவர்கள் சந்தாவை உயர்த்த வேண்டியதன் அவசியத்தை தெளிவுபடுத்தி பங்குத் தந்தையின் பராமரிப்புக்கு கொடுக்கப் படுகிற சந்தா தொகையை திப்பு சுல்தான் காலத்தில் கொடுத்த அதே நிலையினைத் தொடராமல் ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் என்கிற அளவிளாவது கொடுக்க வலியுறுத்தினார்கள். குறைந்தது வருமானத்தில் ஒரு சதவீதமாவது நான் கொடுக்க முன்வர வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்கள். இதன் மூலம் பங்கு தன்னிறை வடைந்து, சுய சார்புடைய பங்காக மாற்றப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். நீங்கள் பங்கு பேரவை தலைவர்கள் பொருளாதார குழுவின் உறுப்பினர்கள். இதை பங்கு மக்களுக்கு எடுத்துக்கூறி பங்குத் தந்தைக்கு உதவியாக இருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள்.



அறிவிப்புகள் : அருட்பணி. மைக்கிள் ஜோ அவர்கள் : 5.30 மணிக்கு திருப்பலி ஆரம்பமாகும். 5.15 மணிக்கெல்லாம் ஆலய வாசலின் முன் பவனியாக நிற்க வேண்டும்.

வருகை பவனி : திருச்சிலுவை ஏந்திய பலிபீட சிறுவர்கள், மறைமாவட்ட குருக்கள், துறவியர் அருட்பணி யாளர்கள், திண்டுக்கல் ஆயர் மற்றும் நமது மறைமாவட்ட ஆயர் - தொடர்ந்து மறைமாவட்ட பிரதிநிதிகள் மூன்று வரிசையாக நடுவில் பெண்களும் இருப்புறமும் ஆண்களுமாக பவனியாக வரவேண்டும்.

தொடரும்...



24. **Fr. M. Maria Louis** - Confessor and Spiritual Director, St. Mary's Cathedral
25. **Fr. S. Leo Johnson** - Ministry in US
26. **Fr. Leo Melquir Babu** - Director, Kaviri Communication Centre
27. **Fr. S. Melchior Raja** - Acting Parish Priest, Viralimalai, Coordinator of Diocesan Commissions, Secretary - Bible Commission and Interfaith Dialogue Centre
28. **Fr. R. Michael Joe** - Vicar Forane & Parish Priest -Puthur
29. **Fr. X. Philomin Raj** - Palakurichy
30. **Fr. A. Sahaya Raj** - B.Ed studies in addition to his present ministry
31. **Fr. T. Sagaya Raj** - Vice-Rector, St. Mary's Cathedral
32. **Fr. G. Saminathan** - Director, Kalai Kaviri
33. **Fr. S. Savarimuthu** - Legal Cell, Chennai
34. **Fr. J. Sebastin Venni** - K. Udaiyapatty
35. **Fr. S. Sekar Sebastin** - Parish Priest, Nazareth & Correspondent St. Thomas Hr. Sec. School
36. **Fr. A. M. Stanislaus Chandran** - Airport
37. **Fr. A. Suresh** - US Ministry
38. **Fr. A. Susai Raj** - R. K. Puram
39. **Fr. I. Thomas Arputha Raj** - Chaplain, St. Anne's Main Chapel
40. **Fr. M. Thomas Gnanadurai** - Woraiyur
41. **Fr. B. Venmani Sylvester** - Pathalapettai
42. **Fr. A. Vincent Joseph** - Periya Milaguparai
43. **Fr. Benjamin Bosco** M.Ss.Cc. - Acting Parish Priest, Nanjur

**PRIESTS-IN-CHARGE & ASSISTANT PARISH PRIESTS**

44. **Fr. P. Anburaj** - Priest-in-charge, Kulithalai
45. **Fr. D. Arockia Raj Benhar** - Priest- in -charge, Kulathurampatty
46. **Fr. Dass** - Priest- in -charge, Special substaion Thuvakudy in addition to his present assignment
47. **Fr. Phillip** - Priest- in- charge, Pettavaithalai
48. **Fr. A. Lenin Arockiaraj** - Assistant, St. Mary's Cathedral
49. **Fr. S.Maria Soosai** - Assistant, Holy Redeemers
50. **Fr. Joseph,** HGN - Assistant, Subramaniyapuram

## At the proposal of their respective Major Superiors the following Religious had been appointed:

| | |
|---|---|
| **Fr. Paul Raj,** CM | Parish Priest, Our Lady of Good health Church, Periyakulathupatty |
| **Fr. Antony Irudayaraj** OCD | Parish Priest, Infant Jesus Church, Edamalaipatty Pudur |
| **Fr. Maria Susai John Lawrance** SMM | Parish Priest, St. Benedict Church, Puthanatham |
| **Fr. Edmand** MSFS | Parish Priest, St. James Church, Ravusapatty |
| **Fr. Marivalan Rayappan** SJ | Parish Priest, Our Lady of Lourdes Church, Teppakulam |
| **Fr. M. Arockiasamy,** O.Praem | Parish Priest, Holy Trinity Church, Teppakulam |
| **Fr. A. Christin Raj,** O.Praem | Asst.Parish Priest, Holy Trinity Church, Sembattu |
| **Fr. Vijaya Kumar** MMI | Parish Priest, Our Lady of Refuge Church, Vayalogam |
| **Fr. Alice** SDM | Priest-in-charge, Sacred Heart Church, Thirukavalur |
| **Fr. John Paul Raj** M.Ss.Cc. | Parish Priest, Our Lady of Sengol Church, Thirumalairayapuram |
| **Fr. Philip Anthony** MPC | Priest-in-charge, Sacred heart Church, Pettavaithalai |
| **Fr. Belavendran** IC | Asst. Parish Priest, St. Joseph's Church, Ponmalai |
| **Fr. Joyal Patric Cletus** IC | Asst. Parish Priest, Our Lady of Lourdes Church, Manapari |
| **Fr. Durai Raj Kumar** MPC | Asst. Parish Priest, St. Joseph the Worker church, Kailasapuram |

## CLARIFICATION - TEAM MINISTRY

*The Team Ministry in the Diocese of Tiruchy is an Experimental, short term, collaborative ministry of few priests to witness the nature of the Church with its charisms and gifts.*

*It is the compilation of the diversity or sharing of the job duties fulfilled by many who have a different job title. It is not an expectation that any one person necessarily fulfills all duties.*

*The Rector is the co-ordinator of the team members who fulfill their respective job descriptions and the link between the past and present.*

By Order
*Bishop Antony Devotta*



## *அருள்பணி பேரவை சென்ற இதழின் தொடர்ச்சி...*

**விஜயக்குமார்** - குடும்ப நலபணிக்குழு : இன்றைய காலக்கட்டத்தில் பணம் வங்கிகளிலிருந்து எடுப்பது என்பது சவாலான ஒன்றாக மாறியுள்ளது. கருப்பு பணம், கள்ள பணம் என்கிற போர்வையில் இத்தகு செயல்பாடுகள் நடந்தேறி வருகிறது. இச்சூழல் அடுத்த வருடம் டிசம்பர் மாதம் வரை நிலவும்



என பொருளாதார நிபுணர்கள் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளனர். இதனால் பாதிக்கப்பட்டிருப்பது அமைப்பு சாரா தொழிலாளர்களே. கத்தோலிக்க கிறிஸ்தவ குடும்பத்தின் பெரும் அளவில் அமைப்பு சாரா தொழிலாளர்களே. கத்தோலிக்க கிறிஸ்தவ குடும்பத்தினரே பெரும் அளவில் அமைப்பு சாரா தொழிலில் பங்கு வகிக்கின்றனர். எனவே கிறிஸ்தவ குழந்தைகள் பள்ளிக்கல்வியை அல்லது மேற்கல்வியை இடைநிறுத்தும் சூழல் மிகுந்து காணப்படுகிறது. எனவே இவ்வாறு இடைநிறுத்தம் செய்த குழந்தைகள் நமது பங்குகளில் உள்ளனரா என்பதை கணக்கெடுத்து அவர்கள் கல்வியை தொடர செய்யும் நல்ல பணியை இவ்வாண்டு செய்தால் நலம் விளையும் என எடுத்துரைத்தார்.

இது வரை பல்வேறு கருத்துக்களை நாம் பகிர்ந்து கொண்டோம். பல நல்ல செயல்பாடுகள் செய்துள்ளோம். இச்செயல்பாடுகளில் செய்யதக்க அளவில் உள்ளதை நீங்கள் உங்களது பங்குதளங்களில் புதிய செயல்பாடுகளாக செய்ய இந்த பகிர்வு ஏதுவாக அமையும் என நம்பிக்கை தெரிவித்தார்கள். இப்போது சொல்லப்பட்ட செயல்பாடுகளில் எல்லோரும் அவரவர் பங்குகளில் செய்யத்தக்க பொதுவான செயல் ஒன்றை கண்டறிவது. ஏற்கனவே நாம் செய்துவரும் இறைஇரக்க ஆண்டின் செயலான முதியவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து, பேணிகாப்பது என்பதுடன் இவ்வாண்டு தேர்ந்தெடுக்கும் செயலையும் சேர்த்துச் செய்வது. முதலாவதாக நாம் மூன்று அல்லது நான்கு செயல்பாடுகளை தேர்ந்தெடுத்து முக்கியத்துவத்தின் அடிப்படையில் வரிசைப்படுத்திக்



கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்பாடுகள் பின்வருமாறு : 1. கண் தானம் செய்ய வேண்டும் என வலியுறுத்திக் கூறினார். 2. இரத்ததானம், 3. இடைநிறுத்தம் செய்துள்ள குழந்தைகளை கண்டறிந்து கல்வி தொடரச் செய்தல். 4. இயற்கையை பாதுகாத்தல் - மரங்கள் நடுதல்.

இவைகளில் நான்காவது செயல்பாடான இயற்கையை பாதுகாத்தல் - மரங்கள் நடுதல் என்பது பற்றி சமீபத்தில் நடந்த ஆயர்கள் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டு, அனைத்து மறைமாவட்டங்களிலும், செயல்படுத்த கேட்டுக் கொள்ளப்பட்டு பரிந்துரைக்கப் பட்டுள்ளது. எனவே மரம் நடுவதையே இந்த ஆண்டுக்கான செயல்பாடாக நாம் தேர்வு செய்து செயல்படுத்தலாமா? என்று அனைவரது ஒப்புதலையும் ஆயர் அவர்கள் கேட்டு, மழைக்காக மரங்கள் நடுவோம் என்கிற அடைமொழியோடு இவ்வாண்டு செயல்படுவோம் எனக்கூறினார்கள். இதன் பொருட்டு ஆயர் வரும் வேளையில் பொன்னாடை அணிவிப்பதை தவிர்த்து மரக்கன்றுகள் தரமாறு கேட்டு கொண்டு அந்த மரக்கன்றை அங்கேயே நட்டு வளர்க்க ஏற்பாடு செய்வது. மேலும் ஏற்கனவே கேட்டுக் கொண்டது போல் பிளக்ஸ் பயன்பாட்டை அறவே தவிர்க்க வேண்டும் என மீண்டும் கேட்டுக் கொள்வதாக வலியுறுத்தி கூறினார்கள். நமது மறைமாவட்ட பாதுகாவலி அமல அன்னை விழாவிற்கு வருகை தரும் திண்டுக்கல் மறைமாவட்ட ஆயர் தாமஸ் பால்சாமி அவர்களுக்கு நாம் ரோஜா செடியை வழங்க உள்ளது இதற்கான தொடக்கமாக அமைந்துள்ளது. எனவே நாம் இனி மழைக்காக மரங்களை நடுவோம் என்கிற நமது நிலைப்பாட்டில் உறுதியாக பயணிப்போம் எனக்கூறி அருட்பணி. சார்லஸ் அவர்களை பேச அழைத்தார்கள்.

**அருட்பணி. சார்லஸ்** - கருமண்டபம் பங்கு : சாதி மறுப்பு திருமணம் செய்து கொண்டுள்ள தம்பதியிரை பாராட்டும் முகமாக 26.12.2016 அன்று நமது ஆயர் தலைமையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சாதி மறுப்பு

திருச்சிராப்பள்ளி பல்நோக்கு சமூகப் பணி மையம் (TMSSS)

## பல் மருத்துவ முகாம்

திருச்சிராப்பள்ளி பல்நோக்கு சமூகபணி மையமானது இதுவரை பொதுமருத்துவமுகாம், கண் மருத்துவ முகாம், காது மூக்கு தொண்டை மருத்துவமுகாம், புற்றுநோய் விழிப்புணர்வு முகாம் போன்ற பல மருத்துவ முகாம்களை ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடத்தி இலவச சிகிச்சைக்கான வழிவகைகளை செய்து வந்தது. இவ்வருடம் முதல் முறையாக பல் மருத்துவமுகாம் 27.08.17 முதல் 31.08.17 வரை ஸ்பெயின் தேசத்தில் இருந்து வந்துள்ள டாக்டர். எமிலியோ மார்டினஸ், டாக்டர். ஆர்த்ரோ மார்ஷன், டாக்டர். ஜோஸ் ரேமன் இவர்களின் உதவியோடு திருச்சி, மணப்பாறை, கீரனூர் பகுதி மக்கள் பயன்பெறும் வண்ணமாக காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை பரிசோதனை செய்து மதியம் 2.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை சிகிச்சை அளிக்கப்பட்டது. குழந்தைகள், பெண்கள், ஆண்கள் உட்பட 850 நபர்களுக்கு பரிசோதிக்கப்பட்டு அதில் 150 நபர்களுக்கு மேலப்புதூர் முரளி பல் மருத்துவமனையில் பல் மருத்துவர் டாக்டர். விஜய் சீனிவாசன் அவர்களின் மேற்பார்வையில் பல் சொத்தை சரி செய்தல், சொத்தையால் பாதிக்கப்பட்ட பற்களை எடுத்தல் மற்றும் பல்சுத்தம் செய்தல் போன்ற சிகிச்சை இலவசமாக அளிக்கப்பட்டது. குறிப்பாக நமது மறைமாவட்ட பள்ளியான ஆர்.சி. மேல்நிலைப்பள்ளியில் சமூக விளையாட்டுப்பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றார்கள்.





மேலும் பற்களை பாதுகாத்தல், பல் துலக்கும் முறைகள் பற்றிய விழிப்புணர்வு கொடுக்கப்பட்டது. சிகிச்சைப்பற்றிய தெளிவு ஒவ்வொரு நபர்களுக்கும் விளக்கி கூறப்பட்டது. முகாமில் கலந்து கொண்ட அனைவருக்கும் பல் துலக்கும் பிரஸ் கொடுக்கப்பட்டது.

செயலர்



## OFFICIAL

### PRIESTS MONTLY RECOLLECTION:

- There will be no Recollection for priests this month. The next monthly Vicariate Priests Recollection will be in October 2017 on Tuesdays according to the usual schedule.

### SUSPENSION:

Mr. David Antonysamy (also called as A.K. David), a former priest of the Archdiocese of Madurai, has been dismissed from the clerical state on the 25th of March 2011. He allegedly celebrates Sacraments under the false name of John Joseph presenting himself in religious attire. Please do not invite him to your Arch/diocese for any celebration of the Sacraments.

Most Rev. Antony Pappusamy
Archbishop of Madurai

### CONDOLENCES TO:

- Fr. Durai Raj Kumar at the passing away of his mother Mrs. Selvamary on 10.08.2017 at the age 68.
- Fr. Gnanadickam at the passing away of mother Mrs. Savariammal on 17.08.2017 at the age of 93.

மறைமாவட்ட செய்தி

## பொதுநிலையினர் தினவிழா

திருச்சி மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவை மற்றும் பொதுநிலையினர் அமைப்புகள் இணைந்து நமது ஆயர் அவர்கள் தலைமையில் 30.7.17 அன்று கொண்டாடப்பட்டது. அருட்பணி. மைக்கில் ஜோ அவர்கள் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றினார். பொதுநிலையினர் பேரவை தலைவர் முனைவர் M.R. அசோகன் அனைவரையும் வரவேற்றார். பணிக்குழு செயலர் முனைவர் P.M. இராஜேந்திரன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக பேரவை செயலர் திரு. குழந்தைராஜ் இருந்தார். முனைவர் பெஸ்கி அவர்கள் 'சமுதாய அரசியல் விழிப்புணர்வு' என்ற தலைப்பில் தற்போது சிறுபான்மையினருக்கு இழைக்கப்படும். மறுக்கப்படும் உரிமைகள் பற்றியும், அரசியல் சூழ்நிலை பற்றியும், கிறித்தவர்களின் நிலை, அதற்காக கிறித்தவர்கள் எடுக்கப்பட வேண்டிய முன்னெடுப்புகள் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறினார். 2017ம் ஆண்டில் அஞ்சல் வழி இறையியல் கல்வி முடித்து சான்றிதழ் பெறாதவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

**செயலர்**

## MEETING WITH THE VICE-PRESIDENT

The Secretary General of the Catholic Bishops' Conference of India, Most Rev. Theodore Mascarenhas, SFX, and the Archbishop of Delhi, Most Rev. Anil Couto, along with 8 representatives from the Archdiocese of Delhi were received by the Honourable Vice-President of India, Mr. Venkaiah Naidu, on 24th August, 2017.



In the audience arranged by the Archdiocese of Delhi, Archbishop Anil Couto congratulated the new Vice-President on his election and assured him of the prayers of the Catholic Church. Bishop Theodore conveyed to Mr. Naidu the sentiments and best wishes of the Catholic Bishops and the whole Catholic Community in India.

In an interaction, which lasted nearly an hour, the Vice-President spoke eloquently about how India was a secular country from the very beginning and how people have been living in peace and harmony since ages. He said that he himself goes both to the Temple as well as the Dargah. He described Prime Minister Narendra Modi as a secular person, who was interested only in development of the Country by including everybody in his developmental programmes. Blaming the politicians for causing divisions on basis of caste and religion and using religious and caste groups as vote banks, he said, the common people were not interested in these issues. On the Gau Rakshak issue, he said the cow was important, but the human being was more important.

Appreciating the selfless work of the Church, he said the Christian Community was a peaceful community and was contributing much to the growth of the Country. He relived with joy his association with the Late Archbishop of Hyderabad, Most Rev. Arulappa, who he said, had given him much affection.

To a query from one of the participants in the meeting, he said, peace and harmony would come about only if there was a change in



## ஆகஸ்டு 10 கருப்பு நாள்

தலித் மக்களை பட்டியலில் சேர்க்க கோரிய கண்டன ஆர்ப்பட்டம் நம்முடைய திருச்சி மறைமாவட்ட ஆயர் அந்தோணி டிவோட்டா அவர்களின் வழிகாட்டுதலிலும், நம் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்திரு. தோ. யூஜின் அவர்களின் தலைமையிலும், இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆகஸ்டு மாதம் 10 ம் நாள் நடந்தேறியது.




**செயலர்**

From SC / ST Commission

## Well-Done

I am here to state that August 10th 2017 was observed as BLACK DAY in all the Dioceses of TamilNadu for demanding SC Status to Dalit Chiristians and Muslims.

It was a big encouragement to all the Dalit Catholics of Trichy Diocese to have witnessed the presence of Msgr. Vicar General, expressing your Concern and solidarity with the Dalit Catholics on the BLACK DAY.

The Diocesan Secretary for the Commission for SC / ST Rev. Fr. Thomas did a great job of organizing the people and made the matter published in all the media.

I take this chance in the name of the Chairman Bishop Most. Rev. Dr. Thomas Paulsamy to thank your Excellency most sincerely for your concern and support and Rev. Fr. Thomas for his hard work and commitment and request your Excellency to motivate all the priests for Dalit Liberation Sunday which falls on the 12th of Nov. 2017.

Secretary

**9ஆம் பக்கத்தின் தொடர்ச்சி**

அழைப்பாளர்களாக வந்து செபத்துடன் நிகழ்வை ஒவ்வொரு நாளும் துவக்கி வைத்தனர்.

மேலும் அருட்பணி. ப்ரட்ரிக் (உதவிப் பங்குத்தந்தை - மணப்பாறை), அருட்பணி. ஆரோக்கிய சுந்தர் ராஜ் (வட்டார அதிபர் மற்றும் பங்குத்தந்தை - மணப்பாறை), அருட்சகோதரி ஜாக்குலின் (தலைமை ஆசிரியை - அன்னாள் நடுநிலைப்பள்ளி, மேலப்புதூர்), பேரருட்திரு. யூஜின் (முதன்மை குரு), அருட்பணி. டேவிட் MMI, அருட்சகோதரி ரோசரி (மாநிலத் தலைவி - ஜோசப் குளூனி, திருச்சி) மற்றும் மேதகு ஆயர் அந்தோணி டிவோட்டா (திருச்சி மறைமாவட்ட ஆயர்) ஆகியோர் மறைக்கல்வி மற்றும் நன்னெறிக்கல்வி ஆண்டு விழாவின் சிறப்பு விருந்தினர்களாக வந்து மாணவ மாணவியரைப் பாராட்டி பரிசுகளை வழங்கினர்.

நம் மறைக்கல்வி மற்றும் நன்னெறிக்கல்வி ஆண்டுவிழா போட்டி மனப்பாங்கை முன் வைப்பதில்லை; முதல், இரண்டு மற்றும் மூன்று எனத் தரம் பிரிப்பதும் இல்லை. மாறாக போட்டிகளைவிட பங்கெடுப்பதும் சக மாணவ மாணவியரிடமிருந்து கற்றுக் கொள்வதும் முக்கியமானது. இயற்கை எப்படி இறைவனின் கொடையோ அது போல திறமைகளும் இறைவனின் கொடை என்பதை மாணவர்கள் உணர்ந்து மகிழ்வுடன் பரிசுகளைப் பெற்றுச் சென்றனர்.

ஆண்டு விழாவை திட்டமிட்டு ஏற்பாடு செய்த மறைக்கல்விப் பணிக்குழு செயலர் வேதியர்கள் மற்றும் தன்னார்வப் பணியாளர்கள் மற்றும் மாணவ மாணவியரைத் தயாரிப்புடன் விழாவில் கலந்துகொள்ள செய்த ஆசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள்!

செயலர்

பத்தாளப்பேட்டை பங்கு

## ஆலய அடிக்கல் நாட்டு விழா

22.08.2017 அன்று பத்தாளப்பேட்டை பங்கு, கிளியூர் கிளைபங்கில் புதிதாக ஆலயம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா நமது ஆயர் தலைமையில் அர்ச்சிக்கப்பட்டு நடைபெற்றது.

செயலர்





mindsets. Responding to another observation from a participant about the increase in attacks on Christians in Tamil Nadu and the Order of a District Magistrate in the State that Churches should be registered if they were to be used for worship, Mr. Naidu promised that he would bring the matter to the attention of the State authorities.

The Vice-President was in his usual jovial mood and kept everyone lively and laughing with his famous one liners.

Archbishop Anil and Bishop Theodore promised the Vice-President the prayers of the Catholic Church in his work of upholding the Constitutions and the democratic secular values of the Country. The Vice-President told the Prelates that they were always welcome to visit him again in the future.

Bishop Theodore Mascarenhas, SFX
Secretary General, CBCI

## மரியன்னை பேராலயத்தில் பங்குப் பணியாளர்கள் பணியேற்பு 25.08.2017



(Left to Right) : பங்குப்பணியாளர் (Animator) ஜோ. லாரன்ஸ்; பங்குப்பணியாளர் (Confessor) மரிய லூயிஸ்; பங்குப்பணியாளர் (Vice-Rector) T. சகாயராஜ்; பங்குப்பணியாளர் (Assistant) லெனின்

# இந்த மாதம் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்

## குடும்ப நலப்பணிக்குழு

திருமணத்தயாரிப்புப் பயிற்சி

நடைபெறும் இடங்கள்:

9, 10 - நல்லாயன் நிலையம்

23, 24 - மணப்பாறை

**செயலர்**

## பெண்கள் பணிக்குழு

2, 3 - கருத்தாளர் பயிற்சி

13 - மையக்குழு கூட்டம்

**செயலர்**

## அருங்கொடை இல்லம்

- ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை உபவாச செபக்கூட்டம் நடைபெறும்.
- ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 5.00 மணி முதல் 8.30 மணிவரை குணமளிக்கும் ஆராதனையும் திருப்பலியும் நடைபெறும்.
- இம்மாதம் முழுஇரவு செபவழிபாடு 15.09.2017 மூன்றாவது வெள்ளி அன்றுநடைபெறும்.
- **அருங்கொடை இல்லத்தினரின் வெளி ஊழியங்கள்** : மதயாணிப்பட்டி, இந்தியன் பேங்க் காலனி, கோலார் பட்டி, கைலாசபுரம், மலையடிப்பட்டி, நத்தமாடிப்பட்டி, என். குட்டப்பட்டு

**சிறப்பு நிகழ்வுகள் :**

- 01.09.2017 மாதத்தின் முதல் வெள்ளி இறை இரக்கத்தின் திருப்பலி காலை 10.30 மணி முதல் 1.00 மணி வரை நடைபெறும்.
- நற்செய்தி பெருவிழா : செப். 29,30 முதல் அக். 01 ஆம் தேதி வரை நடைபெறும்.

**செயலர்**

## இளையோர் பணிக்குழு

| பங்குச் சந்திப்பு | பள்ளிச் சந்திப்பு |
|---|---|
| கிராப்பட்டி | குழந்தை இயேசு உ.நி.பள்ளி, காஜாமலை |
| நாகமங்கலம் | புனித அந்தோணியார் மே.நி.பள்ளி, துரைசாமிபுரம் |
| பொன்மலை | சிறுமலர் மே.நி.பள்ளி, கிராப்பட்டி |
| அம்பிகாபுரம் | உலக மீட்பர் ந.நி.பள்ளி, பாலக்கரை |
| | **செயலர்** |



# மறைமாவட்டச் செய்திகள்

மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி ஆண்டு விழா 17-18

## இயற்கை கடவுளின் கொடை

திருச்சி மறைமாவட்டத்திலுள்ள 174 பள்ளிகளுக்கும் மறைக்கல்வி மற்றும் நன்னெறிக்கல்வி ஆண்டு விழா ஆகஸ்ட் மாதம் 3ஆம் தேதி முதல் 11ஆம் தேதி வரை 6 நாட்கள் நடைபெற்றன. இந்த ஆண்டு மறைக்கல்வி மற்றும் நன்னெறிக்கல்வி ஆண்டு விழாவுக்கு "இயற்கை கடவுளின் கொடை" என்கிற தலைப்பு தரப்பட்டது. முதல் 2 நாட்கள் மணப்பாறை மறைவட்டத்திலுள்ள பள்ளிகள் முறையே துவக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு முதல் நாளும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு இரண்டாம் நாளும் என தூய லூர்து அன்னை ஆலயத்தில் மறைக்கல்வி மற்றும் நன்னெறிக்கல்வி ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

அடுத்தடுத்து வரும் 4 நாட்கள் முறையே துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் ஆங்கில வழிப் பள்ளிகள் என மறைக்கல்வி மற்றும் நன்னெறிக்கல்வி ஆண்டு விழா நல்லாயன் நிலையத்தில் கொண்டாடப்பட்டது. மாணவ மாணவியர்கள் தங்களின் திறமைகளை நன்னெறிக் கருத்துக்களோடு கலந்து படைத்தது அருமையாக இருந்தது. மாறுவேடம், குழுநடனம், குழுநாடகம், பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி, வண்ணக் கலவைகள் கொண்டு ஓவியம் தீட்டுதல், கலைப் படைப்புகள் மற்றும் கதை சொல்லுதல் போன்ற போட்டிகள் நடைபெற்றன. விழாவுக்கு பள்ளிகளின் தாளாளர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் வருகை தந்தனர்.

ஒவ்வொரு நாளும் பல்வேறு பள்ளிகளின், சபைகளின் பொறுப்பாளர்கள் மற்றும் மறைக்கல்விப் பணிக்கு முழு ஒத்துழைப்பும் தரும் ஒருவர் போட்டிகளைத் துவக்கி வைக்க அழைக்கப்பட்டார். அருட்சகோதரி ஜூலி (தலைமை ஆசிரியர் - சிறுமலர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி - மணப்பாறை), அருட்பணி. ஜான் கென்னடி, அருட்சகோதரி கருணை (தலைமை சகோதரி - மரியகம் இல்லம்), அருட்பணி. மெல்கியோர் (நல்லாயன் மேய்ப்புப் பணியகத்தின் பணிகள் ஒருங்கிணைப்பாளர்), அருட்சகோதரி. ஜூலி (தூய அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி உதவி தலைமை ஆசிரியை) மற்றும் அருட்சகோதரர் அருளப்பன் (கேம்பியன் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப்பள்ளி துணை முதல்வர்) ஆகியோர் விழாவுக்கு சிறப்பு

இதன் தொடர்ச்சி பக்கம் 10